DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 45/2024

Deposition of Witness of PW10

Name	: பழனிசாமி	Caste	:
Father's Name	: ராமசாமி	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th August 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது பவானியில் குடியிருந்து கொண்டு கஸ்துாரிபா அறக்கட்டளையின் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 01.12.2017**ல் கஸ்துாரிபா அறக்கட்டளை கண்காணிப்பாளராக பணி அமர்த்தப்பட்டேன்.** 16.12.2018 **அன்று எங்கள் அறக்கட்டளை செயலாளர் எஸ்.என். பாலசுப்பிரமணியம் என்னிடம் பள்ளியின் தலைமை ஆசிரியராக பெரியசாமி பள்ளி ஆசிரியர்களிடம் பணம் மோசடி செய்துவிட்டார் என்றும், அரச்சலுார் காவல்நிலையத்தில் புகார் செய்துள்ளேன் என்று சொன்னார்.** 17.12.2018 **ம் தேதி காலை** 10.30 **மணிக்கு போலீஸார் வந்து பள்ளியை பார்வையிட்டு நீல, அகலங்களை அளந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.** **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் சொல்வதுபோல் போலீஸார் பள்ளி வந்து பார்வை மகஜர் தயார் செய்து நான் கையெழுத்து செய்ததாக சொல்வது பொய் என்றும், நான் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு தான் கையெழுத்து செய்தேன் என்றால்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:07:46 +0530

சரியல்ல. என்னை எஸ்.என்.பாலசுப்பிரமணியம் தான் பணியில் அமர்த்தினார் என்றால் அவரின் உறவினர் பரிந்துறையால் எனக்கு மேற்படி பணி நேர்முக தேர்வு மூலம் கிடைத்தது. எஸ்.என்.பாலசுப்பிரமணியம் என்னை வேலைக்கு சேர்த்ததால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:07:52 +0530

DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 45/2024

Deposition of Witness of PW9

Name	: தங்கவேல்	Caste	:
Father's Name	: தேவணகவுண்டர்	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th August 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

முதல் விசாரணை:

நான் தற்போது கந்தசாமிபாளையத்தில் வசித்து கொண்டு விவசாயம், கோழிப்பண்ணை நடத்தி வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை, டிசம்பர் 2018 வருடம் நான் மேற்படி காலகட்டத்தில் கஸ்துாரிபா கிராம உயர்நிலை பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத்தலைவர் மற்றும் பொருளாளராக இருந்தேன். என்னை அரச்சலுார் காவல்நிலைய போலீஸார் என்னை விசாரித்தார்கள். கஸ்துாரிபா கிராம உயர்நிலை பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக வசந்தி பணிபுரிந்து வந்தார். அவர் டிசம்பர் 2018 ல் என்னிடம் வந்து அறக்கட்டளைக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி ரூ.6லட்சம் தலைமை ஆசிரியர் பெரியசாமி வாங்கியதற்காக இரசீது வேண்டும் என்று கேட்டு கொடுக்கவில்லை என்று என்னிடம் வந்து சொன்னார்.

2. **அறக்கட்டளைக்கு தான் வசூல் செய்து கொடுத்துவிடுவதாக சொல்லி வசந்தி ஆசிரியரிடம் இருந்து பணம் வாங்கியதாக சொன்னார். அறக்கட்டளை சார்பாக பணம் எதுவும் வாங்கமாட்டார்கள் எனவே இது சம்பந்தமாக அறக்கட்டளை செயலாளரிடம் சொல்லுமாறு நான் சொன்னேன். அறக்கட்டளை செயலாளர் பாலசுப்பிரமணியம் என்னை அழைத்து வசந்தி புகார் சம்பந்தமாக**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:02 +0530

கேட்டார். அப்போது நான் ஒருவேலை பெரியசாமி பணம் வாங்கியிருந்தால் உரிய சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என சொன்னேன். அப்போது வாட்ச்மேன், ஆசிரியர்கள் 2,3 பேர் எஸ்.எஸ். பாலசுப்பிரமணியமிடருந்து வந்து அவர்களிடம் பெரியசாமி பணம் பெற்றதாக சொன்னார்கள். அப்போது நான் இருந்தேன். எனவே இது சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய போலீஸார் 19.12.2018 என்னை விசாரித்து வழக்கு விபரம் சம்பந்தமாக கேட்டார்கள். நான் மேற்படி விபரத்தை போலீஸாரிடம் சொன்னேன். போலீஸார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

என் குழந்தைகளோ, பேத்தி, பேரனோ கஸ்துாரிபா பள்ளியில் படிக்கிறார்களா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் கஸ்துாரிபா உயர்நிலை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் நான் பொறுப்பில் செயலாளராக நியமிக்கப் பட்டேன் என்றால் 2004 ல் கஸ்துாரிபா பள்ளி 20 மாணவர்களுடன் கடும் நெருக்கடியில் நிர்வாகம் செயல்பட்டதால் அறக்கட்டளை செயலாளர் பாலசுப்பிரமணியம் நான் உள்பட பலரை அனுகி பள்ளிவளர்ச்சிக்காக மாணவர்களை அதிகமாக சேர்க்குமாறு கோரியதால் நான் அதற்கு முன் முயற்சியாக 20 குழந்தைகளை சேர்த்து பள்ளிக்குவேண்டிய பொருட்களை வழங்கியதால் என்னை பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் நான் பொறுப்பில் செயலாளராக நியமித்தார்கள்.

2. எஸ்.என்.பாலசுப்பிரமணியத்தின் வேண்டுகோளின்படி பள்ளியில் சேர்ந்து பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பெற்றோர் ஆசிரியர் சங்க பொறுப்பில் இருந்தபோது என்ன மாதிரியான பணிகளை நான் பார்த்தேன் என்றால் பள்ளியில் விடுதியில் உணவு சம்பந்தமான புகார், பள்ளியில் ஆசிரியர்கள் கற்பித்தலை மேம்பாடு செய்வதற்காக ஆலோசனை செய்வோம், பள்ளி வளர்ச்சிக்காக அதிக உறுப்பினர்களை ஆலோசனை செல்வேன், பள்ளி குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு போட்டி வைத்து பரிசுகள் வழங்குவோம். பள்ளி ஆசிரியர் தங்களது தேவை குறித்து என்னிடம் கோரிக்கை வைப்பார்களா என்றால் வைப்பார்கள். அதுபோல் என்னிடம் தலைமைஆசிரியரிடம் பணம் கொடுத்ததாக சொல்லி ஏதாவது ஆசிரியர்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாக சொன்னார்களா என்றால் புகார் கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான் என்னிடம் சொன்னார்கள்.

3. என்னிடம் புகார் சொன்னது வசந்தி மட்டும் தான் சொன்னார். வசந்தி

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:11 +0530

என்னிடம் பெரியசாமிக்கு தொகை கொடுத்ததாக சொல்லியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி விபரம் 1 வாரத்திற்கு முன்பே தெரிந்த நிலையில் அதை அறக்கட்டளை செயலாளர் பாலசுப்பிரமணியத்திடம் சொன்னேனா என்றால் சொன்னேன். தலைமை ஆசிரியருக்கும், பள்ளி நிர்வாக செயலாளர் பாலசுப்பிரமணியத்திற்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக பாலசுப்பிரமணியத்தின் ஆதரவாக பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்றால் பள்ளியில் என்னுடைய குழந்தைகளோ, பேரக் குழந்தைகளோ படிக்க வேண்டும் அல்லாத பட்சம் எஸ்.எம். பாலசுப்பிரமணியத்தின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் நான் நியமிக்கப் பட்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:18 +0530

DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

CC.No. 45/2024

Deposition of Witness of PW8

Name	: R. கந்தசாமி	Caste	:
Father's Name	: ராமசாமி	Calling	:
Village	:	Religion	:
Taluk	:	Age	:

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th August 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது சின்னதாண்டாம்பாளையத்தில் வசித்து கொண்டு வாழைத்தோட்டத்தில் கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணிபுரிகிறேன். எனது மனைவி எஸ். வசந்தி கஸ்துாரிபா உயர்நிலை பள்ளியில் உடற்கல்லி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். ஆரம்பத்தில் என் மனைவிக்கு மேற்படி பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் ஆசிரியராக பணியமர்த்தப்பட்டார். 2018 ம் ஆண்டு என் மனைவியின் பணி நிர்வாகத்தின் சார்பாக நிரந்தரம் செய்யப்பட்டது. அப்போது அந்த பள்ளியின் தலைமை ஆசிரியராக ஆஜர் எதிரி பெரியசாமி இருந்தார். என் மனைவிக்குஅவர் தான் உயர் அதிகாரி ஆவார். நிர்வாகத்தின் மூலம் பணி நிரந்தரம் செய்துள்ளதால் நிர்வாகத்தின் அறக்கட்டளைக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி எதிரி பெரியசாமி என் மனைவியிடமும் என்னிடமும் கேட்டார்.

2. மேற்படி நிர்வாகம் பணி நிரந்தரம் செய்துள்ளதால் எதிரி பெரியசாமி கேட்டபணத்தை கொடுப்பதற்கு நாங்கள் முன்வரவில்லை. ஒரு கட்டத்தில் பெரியசாமி எங்களை மனஉளைச்சல் ஏற்படுத்தினார். பெரியசாமி எங்களிடம்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:27 +0530

அவர் தலைமை ஆசிரியராக இருப்பதால் என் மனைவியின் ஆசிரியர் பணிக்கு ஏதாவது ஒரு வகையில் இடையூறு ஏற்படுத்தி விடுவதாக சொல்லி எங்களை மிரட்டினார். இதுசம்பந்தமாக நானும், எனது மனைவியும் கலந்து பேசி அறக்கட்டளைக்கு தானே பணம் கொடுக்கிறோம் என்று சொல்லி முதல் கட்டமாக கந்தசாமிபாளையம் சூர்யா பேக்கரியில் ஏப்ரல் 2018 ல் ரொக்கமாக ரூ.4லட்சம் நான் எதிரியிடம் கொடுத்தேன். மீண்டும் 6வது மாதம் 2018ம் ஆண்டு சூர்யா பேக்கரில் வைத்து ரூ.2லட்சம் பெரியசாமியிடம் நான் கொடுத்தேன். மேற்படி கொடுத்த பணத்திற்கு நான் இரசீது கேட்டேன். காலதாமதப்படுத்திக் கொண்டே இருந்தார். ஒரு சூழ்நிலையில் இரசீது கொடுக்காததால் எதிரி மீது சந்தேகம் ஏற்பட்டு பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் தங்கவேலுவிடம் இதுபற்றி நான் தெரிவித்தேன்.

3. மேற்படி தங்கவேல் என்னிடம் பள்ளிக்கு என்று அறக்கட்டளைக்கு என்று எந்தவித பணம் கொடுக்கவேண்டியது இல்லை வசூல் செய்யவில்லை என்றும் சொன்னார் அதனால் இந்த புகாரானது எதிரி மீது கொடுத்தோம். இது சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலைய போலீஸார் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சூர்யா பேக்கரில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்வதற்கு எந்த சாட்சி இல்லை என்றால் இல்லை. மேற்படி ஏப்ரல் 2018, 6வது மாதம் 2018 ல் என்னிடம் அவ்வளவு தொகை இருந்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. என் மனைவிக்கு தலைமை ஆசிரியர் மன உளைச்சலை ஏற்படுத்தினார் என்ற சூழ்நிலையில் நான் அரசு ஊழியர் என்பதாலும் படித்த நபர் என்பதாலும் உடனடியாக கஸ்தூரிபா கல்வி அறக்கட்டளை தலைவரிடமோ பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரிடமோ பெரியசாமி மீது புகார் செய்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் எதிரி என் மனைவியின் பணிக்கு இடையூறு செய்துவிடுவார் என்று செய்யவில்லை. என் மனைவியின் பணி 07.02.2018 தேதியன்று நிரந்தரம் செய்யப்பட்டது என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை.

2. பணி நிரந்தரம் செய்யப்பட்டதற்கு பின்னர் நான் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல, எதிரி பெரியசாமி பணி நிரந்தரக்காக செலவு செய்ததால் பணம் கொடுக்கவேண்டும் என்ற சொல்லி கேட்டார். நான் எம்.ஏ

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:35 +0530

பொருளியல் முதுகலை பட்டம் படித்துள்ளேன். நான் கூட்டுறவு சங்கத்தில் 36 வருடங்களாக பணியில் உள்ளேன். படித்து விபரமாக உள்ள நிலையில் தலைமை ஆசிரியர் பணம் கேட்கிறார் என்ற விபரத்தை பள்ளி நிர்வாகத்திடமோ, பெற்றோர் ஆசிரியர் சங்கத்திலோ குறிப்பிடாமல் இருந்தது சரியா, தவறா என்றால் சரிதான், ஏனென்றால் நான் காலதாமதமாகத்தான் புகார் செய்தேன். தலைமை ஆசிரியர் என் மனைவிக்கு மன உளைச்சல் கொடுத்தார் என்பது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, ஏனென்றால் பள்ளி நிர்வாகத்தை மீறி புகார் கொடுக்கக்கூடாது என்று கொடுக்கவில்லை. நான் முதல் தவணை கொடுத்ததாக சொல்லும் காலகட்டத்திற்கும் 2வது தவணை கொடுத்தததாக சொல்லும் காலகட்டத்திற்கும் உள்ள இடையே சுமார் 2 மாத காலம் இடைவெளி உள்ள நிலையில் அப்போதாவது அறக்கட்டளை நிர்வாகத்திடம் புகார் செய்தேனா என்றால் இல்லை, 2வது தவணை கொடுத்த பிறகு தான் புகார் செய்தேன்.

3. என் மனைவி அறக்கட்டளை தலைவரிடம் கொடுத்த புகாரில் எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தார் என குறிப்பிடவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தலைமை ஆசிரியர் பொதுவாக பள்ளி நிர்வாகத்தில் தலையிடமுடியாது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் இந்த எதிரி அறக்கட்டளை தலைவருடன் அதிக நெருக்கமாக இருந்ததால் அனைத்து செயல்பாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டார். எத்தனை முறை அறக்கட்டளை தலைவர் பாலசுப்பிரமணியத்தை பார்த்துள்ளேன் என்றால் நான் பணிபுரியும் அலுவலகத்தில் ஒருமுறையும், அறக்கட்டளை அலுவலகத்திலும் வைத்தும் பார்த்தேன்.

4. நான் அரசு ஊழியராக இருக்கும் நிலையில் பணி நிரந்தரத்திற்காக பணம் கொடுப்பது சட்டபடி தவறு என்பது எனக்கு தெரியுமா என்றால் நான் பணி நிரந்தரத்திற்கோ, வேலை வாய்ப்புக்கோ பணம் கொடுக்கவில்லை, அறக்கட்டளை பணம் தரவேண்டும் என்ற கேட்டதால் பணம் கொடுத்தேன். அதற்குஇன்றைய தேதிவரைஇரசீது வழங்காததால் நான் புகார் கொடுத்தேன். அறக்கட்டளைக்கு தலைவர், செயலாளர் உள்ள நிலையில் அறக்கட்டளைக்கு செலுத்தும் பணத்திற்காக பள்ளி தலைமை ஆசிரியர் இரசீது வழங்கமுடியாது என்ற விபரம் தெரியுமா அல்லது தெரியாதா என்றால் தெரியாது. வருமானவரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:45 +0530

5. நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.6லட்சம் தொகையை வருமானவரி கணக்கை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது, மேலும் அந்த பணம் எனது மனைவியின் தகப்பனார் கொடுத்த தொகை ஆகும். நான் அரசு ஊழியரான நபர் ரூ.20,000த்திற்கு மேல் ரொக்கமாக கொடுக்கக்கூடாது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சூர்யா பேக்கரிக்கும் நான் உள்ள ஈரோட்டிற்கும்எவ்வளவு துாரம் என்றால் சுமார் 32 கிலோமீட்டர் துாரம் இருக்கும். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் காலகட்டத்திற்கும் எனது மனைவி புகார் கொடுத்ததாக சொல்லும் காலகட்டத்தில் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் தங்கவேலுவிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தகவல் சொன்னேன். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் தங்கவேலுவிடம் புகார் கொடுப்பதற்கு முன்பாக வாய்மொழியாக சொன்னதாக சொல்லும் விபத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீஸார் அதுபற்றி கேட்கவில்லை.

6. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் நான் கொடுக்கப்பட்டதாக சொல்லும் தொகை பொய் என்றால் சரியல்ல. தலைமை ஆசிரியருக்கும், பள்ளி நிர்வாக செயலாளர் பாலசுப்பிரமணியத்திற்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக பொய்யாக என் மனைவி பாலசுப்பிரமணியத்தின் துாண்டுதல் பேரில் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி புகார் பொய் என்பதால் தான் உறவினரிடம் பணம் வாங்கி கொடுத்ததாக பொத்தாம்பொதுவாக சொல்லப்பட்டுள்ளது யாரிடம் எந்த தேதியில் எவ்வளவு தொகை வாங்கி எதிரிக்கு எந்த தேதியில் எப்போது எங்கு வைத்து கொடுத்தேன் என்ற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியராக இருந்து ரூ.20000த்திற்கு மேல் பண பரிவார்த்தனை செய்யும்போது வங்கி வரைவோலையாக கொடுக்கவேண்டிய விதி உள்ளதை தெரிந்தும் ரொக்கமாக பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளதுபொய் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:08:52 +0530